1970 செப்டம்பர் 8]

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, கருணா என்ற ஹை ஈல்டிங் வெரைட்டியை மாதிரிப்பண்ணைகள் வைத்து உற்பத்தி செய்வதற்காக மத்திய அரசு அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் வந்து அதைச் சரியாகவே கவனிப்பதில்லை. ஆகவே, மாநில அரசாங்கமே அதிகப்படியாக அதன் உற்பத்தியைப் பெருக்க முயற்சி செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: புது ரக நெல்லான கருணா-வை இன்று பலயிடங்களில் விவசாயிகள் தனிப்பட்ட முறையிலும் அரசாங்கப் பண்ணைகளிலும் விதை உற்பத்தி செய்யும் வகையில் ஈடுபட்டு அதிகப்படியான விதைகளை உற்பத்தி செய்துகொண்டு வருகிறார்கள். தேவையான அளவிற்கு விதைகளை உற்பத்தி செய்துவிட்ட பிறகு விவசாயிகளிடம் விநியோகிக்கப்பட்டு முறையாக நடைபெறுகிறது. அதனால் விவசாயிகள் மூலம் அதிகப்படியான விளைச்சலைக் காணமுடியும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்த ஐ. ஆர். 8 நெல்லுக்கு அதிக அளவில் இரசாயன உரம் உபயோகிப்பதால் இதன் அரிசியைச் சாப்பிடுகிறவர்களுக்கும், அதேபோல் அதன் வைக்கோலைச் சாப்பிடுகிற கால்நடைகளுக்கும் தீங்கு ஏற்படுகிறது என்று சொல்லப்படுகிறது. இதைப் பற்றி அரசாங்கத்திற்கு திட்ட வட்டமான புகார்கள் வந்திருக்கிறதா? இந்த ஐ. ஆர். 8 அரிசியை வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சாப்பிட்டிருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அதிகப்படியான உரம் போடத்தான் வேண்டும். உரம் அதிகப்படியாக போடவேண்டும். ஆனால் அதற்குரிய விளைச்சலும் அதிகமாகவரும். பூச்சிக் கொல்லி மருந்தையும் அதிகமாகப் போடவேண்டும். பூச்சிகளை ஈர்க்கக் கூடிய சக்தி இந்தப் பயிருக்கு இருக்கிறது. நிறையப் பூச்சிகள் வருகின்றன. ஆகவே அதிகமாக உரமும் போடவேண்டும், பூச்சிக்கொல்லி மருந்தையும் அதிகமாகப் போட வேண்டும். அப்படிச் செய்தால் விளைச்சல் அதிகமாக இருக்கிறது. அதைச் சாப்பிடுவதால் எந்தவிதமான கோளாறும் இருக்கவில்லை. நானும் அதைச் சாப்பிட்டிருக்கிறேன் என்று உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பம்பு செட்டுகள் பழுது பார்த்தல்

*296 வினா—திரு. என் கிட்டப்பா: மாண்புமிகு வேளாண்மை, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விவசாயத்திற்குப் பயன்படும் பம்பு செட்டுகளைப் பழுது பார்க்க "பறக்கும் குழுக்கள்" (Flying Squads) அமைக்கும் செயத் குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இல்லை.

திரு. என். கிட்டப்பா: இனியாவது அம்மாதிரியான 'பறக்கும் குழுக்களை' அமைக்க அரசு ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: அப்படி ஏற்படுத்த வேண்டிய அவசியமில்லை என்றுதான் அரசு கருதுகிறது. இப்போதே கிட்டத்தட்ட 29 கம்பெனிகள் அவர்களாகவே இந்த பம்ப் செட்களை எல்லாம் கொடுக்கிறார்கள். அவற்றைச் செப்பனிடும் பணியையும் அவர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். எல்லாயிடங்களிலும் தனித்தனி மெக்கானிக்களும் வேறு இருக்கிறார்கள். கிராமங்களில்கூட மெக்கானிக்கள் இருக்கிறார்கள். அவைகளை உற்பத்தி செய்து கொடுத்து வகை செய்கிற 29, 30 கம்பெனிகள் இருக்கின்றன. ஆகவே, இதில் தனியானவிதத்தில் எந்தவித முயற்சியிலும் அரசு ஈடுபடவேண்டிய அவசியமில்லை என அரசு கருதுகிறது.

Bifurcation of Ramanathapuram district

* 292 *Q.*—THIRU T. MARTIN: Will the Hon. the Minister for Finance be pleased to state:

(*a*) whether there is any proposal under the consideration of the Government at present to bifurcate the Ramanathapuram district; and

(*b*) if so, the particulars thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: இல்லை. 1972 பொதுத் தேர்தல் முடியும் வரை ஆட்சி வரம்பை இரு கூறாக்கவோ, சேர்க்கவோ, விலக்கவோ எதுவும் நடவடிக்கை எடுக்க இயலாது.

திரு. டி. மார்டின்: இந்த இராமநாதபுரம் மாவட்டம் பெரியதொரு மாவட்டமாக இருந்து கொண்டு அட்மினிஸ்ட்ரேட்டிவ் எஃபிஷியன்சி இலாத முறையில் கிழக்கு இராமநாதபுரத்திலிருந்து மேற்கு இராமநாதபுரத்திற்கு போகவேண்டுமானால் எவ்வளவோ இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலையில் அங்குள்ள மக்கள் இருக்கிறார்கள் என்பது இந்த அரசின் பரிசீலனையில் வெகு காலமாகவே இருந்து வருகிறது. எனவே, அதை மனதிற்கொண்டு, 1972 தேர்தலில் இது இடைஞ்சலாக இருக்காது என்பதையும் மனதிற்கொண்டு உடனடியாக அந்த மாவட்டத்தை இரண்டாகவோ அல்லது மூன்றாகவோ பிரித்து நிர்வாக வசதிகளுக்கு ஏற்பாடு செய்ய அரசாங்கம் துரித நடவடிக்கைகள் எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: உறுப்பினர் அவர்கள் சொல்கிற நியாயம் முழுவதையும் அரசு ஏற்றுக்கொள்கிறது. அந்த மாவட்டம் நீண்ட நெடுங்காலமாகவே அப்படி இருந்து கொண்டு வருகிறது. அந்த மாவட்டம் மட்டும் அல்ல, வேறு பல மாவட்டங்களையும் நிர்வாக சௌகரியத்திற்காகப் பிரிக்க வேண்டும் என்பதற்காக டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனைப் பற்றி ஆராய குழு ஒன்று அமைக்கப்பட்டு அது பெரிய மாவட்டங்கள் இருக்கின்றன என்று பரிந்துரையும் சொல்லியிருக்கிறது. ஆனால் இப்போதிருக்கிற இடைஞ்சல், தேர்தலில் நமக்கு இருக்கிற சாதக பாதகங்கள் பற்றியல்ல. மத்திய அரசாங்கம் 1972-ம் ஆண்டு வரையில் இப்போது சென்சஸ் காரியங்கள் நடைபெறுவதால், பொதுத் தேர்தல் வருகிறதை பாதிக்கக் கூடாது இந்த அமைப்புகள் வந்தால் என்று தடை உத்தரவு, மாவட்டங்கள் பிரிப்பதற்கு இப்போது தடை உத்தரவு, மத்திய அரசால் போடப்பட்டிருக்கிறது. அந்தக் காரணத்தினால்தான் இதைப் பரிசீலனை செய்யமுடியவில்லை.